**கவனிக்க.-** 2008.09.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1567 - 2008 සැප්තැම්බර් 12 වැනි සිකුරාදා - 2008.09.12

1567 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 996 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 997 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 998 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, செத்தெம்பர் 19 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, செத்தெம்பர் 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2009

*(2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரை)*

*2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலத்தில் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளின் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பத்திரங்கள் யாவும் தற்போது அமுலில் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும், 1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விவரங்களுக்கமைய வைப்புப்பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படுதல்வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்கள் முறையான மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "........................................ இலக்க .................................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி" எனக்குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2008.09.23 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*5. 2008.09.23 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் யாவும் திறக்கப்படும். அவ்வமயம் கேள்விப் பத்திரதாரர்கள் திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை தவறும் தவறணைகள் 2008.11.11 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு விற்பனையாகும். அப்பொழுது ஏற்றுகொள்ளப்படும் கேள்விப்பத்திரங்கள் வர்த்தமானியில் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*7. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*ஆர். பி. தயாரத்ன,*
*பிரதேச செயலாளர்,*
*திவுலப்பிட்டிய.*

*திவுலப்பிட்டிய பிரதேச செயலகம்,*
*திவுலப்பிட்டிய.*

### அட்டவணை

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கம் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 27 தாகொந்த | திவுலப்பிட்டிய | தாகொன்ன | முற்பகல் 11.00 பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00 பிற்பகல் 8.00 | 4,000 | 2008.09.23 முற்பகல் 10.30 |

9- 494

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2008 ஒகத்து 15 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனி பற்றிய அறிவித்தல்

*கம்பனியின் பெயர்: த கொம்பனியன் மீடியா வேர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்*

*கம்பனி இலக்கம் : பிவி 65178*

*அலுவலகம் : இல. 10/2, போகஹவத்த அத்திடிய வீதி, தெஹிவளை.*

இரா. செந்திற்குமரன்,
செயலாளர்.

*2008, ஓகத்து 20.*

*9- 432/1*

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2008 ஒகத்து 05 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனி பற்றிய அறிவித்தல்

*கம்பனியின் பெயர்: குலோபல் எலிப்ஸ் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்*

*கம்பனி இலக்கம் : பிவி 65061*

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 38, இராஜசிங்க வீதி, கொழும்பு 06*

இரா. செந்திற்குமரன்,
செயலாளர்கள்.

*2008, ஓகத்து 20.*

*9- 432/2*

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 72/54, ஸ்ரீ புஸ்பதான இரண்டாவது ஒழுங்கை, பைரவகந்த, விஜேநாயக்க வத்த, கண்டி எனும் முகவரியைச் சேர்ந்த லொக்கு களுகமகே சிதந்தா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருவது, கண்டி பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மத்திய பிராந்திய அலுவலகத்தில் தொகை எண் 8, தொகுதி எண் 53 இன் கீழ் பதிவு செய்யப்பட்டு இலக்கம் 2649 திகதி 31.03.2000 கொண்டதும் பொது நொத்தாரிசு எஸ். ராஜமுனி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான இல. 64, ஹீரஸ்ஸ கல வீதி, கண்டி முகவரியைச் சேர்ந்த திருமதி லொக்குகளுகமகே சாந்தி என்பவருக்கு வழங்கப்பட்ட தத்துவபத்திரம் இரத்துச் செய்யப்பட்டு வெற்றும் வறிதுமாக்கப்படுகிறது. இதன் பின்னர் என் சார்பில் அவரால் மேற்கொள்ளப்படும் சட்ட மற்றும் நிபந்தனைகள் சார்பான எந்தவொரு செயற்பாட்டுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என தெரியப்படுத்துகின்றேன்.

லொக்குகளுகமகே சிதந்தா

*2008, ஓகத்து 04.*

*9- 458*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இற்கமைய ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.*

*கம்பனியின் பெயர்: ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனி இலக்கம் : பிவி 64952*
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.*

*சபையின் கட்டளைப் பிரகாரம்,*

கோப்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்,
ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்.

*9- 501*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இற்கமைய டீ ரைம் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டெட் 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்: டீ ரைம் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனி இலக்கம் : பிவி 64833*
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 25, கிருல வீதி, கொழும்பு - 05.*

*சபையின் கட்டளைப் பிரகாரம்,*

கோப்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்.

*9- 502*

---

## அறிவித்தல்

*த லக்ஸ்மன் கதிர்காமர் பௌன்டேஷன் (கரண்டீ) லிமிட்டெட் 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி 2007 ஆண்டின் 7 ஆம் இலக்க*

கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இற்கமைய கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: த லக்ஸ்மன் கதிர்காமர் பௌன்டேஷன் (கரண்ட்டீ) லிமிட்டெட்

கம்பனி இலக்கம் : ஜீஎல் 2038

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10.

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9- 503

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நிகவரெட்டி, ஆரண்ய வீதியில் வசிக்கும் ஹேரத் முதியன்சலாகே ஹேரத் ஆகிய நான், நொத்தாரிசு டீ. எம். எம். பி. பீ. தென்னகோன் அவர்களால் 2001, மே 16 ஆந் திகதி உறுதிப்படுத்திய 10599 ஆம் இலக்க அட்டோர்ணித் தத்துவத்தின் பிரகாரம், ஆனமடுவ தம்மென்னாவ நந்தன வீட்டில் வசிக்கும் ராஜபக்ஷ முதியன்சலாகே சுமனா ராஜபக்ஷவுக்கு வழங்கிய அனைத்து அதிகாரங்களையும் இதனால் இரத்துச்செய்து செயலிழக்கச் செய்கிறேன்.

இதன் பின்னர் மேற்குறிப்பிட்ட 10599 ஆம் இலக்க அட்டோர்ணித் தத்துவத்தின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட ராஜபக்ஷ முதியன்சலாகே சுமனா ராஜபக்ஷ என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பில்லை என அறியத்தருகிறேன்.

ஹேரத் முதியன்சலாகே ஹேரத்.

9-586

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

| கம்பனியின் பெயர் | கம்பனியின் இலக்கம் | திகதி | பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி |
|---|---|---|---|
| சிலோன் ப்ளான்டேஷன் அன்ட் எக்ஸ்போட்டஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பிவி 65030 | 01.08.2008 | இல. 320-1/1, காலி வீதி, கொழும்பு 03 |
| ஜப்பான் லங்கா ஒட்டோ பாட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பிவி 65031 | 01.08.2008 | இல. 110, பரன கொட்டாவ வீதி, மிரிஹான, நுகேகொடை |
| சட் ஏசியா (பிறைவேட்) லிமிட்டெட் | பிவி 65139 | 12.08.2008 | இல. 9சி, ஓஷன் டவர், ஸ்டேஷன் வீதி, கொழும்பு 4 |
| டம்மின்னா எக்ரி (பிறைவேட்) லிமிட்டெட் | பிவி 65181 | 15.08.2008 | இல. 272/ 27, சுதர்ஷன மாவத்தை, மாலபே |
| சிலோன் எலிபன்ட் ப்ரொடெக்ஷன் ஓகனைசேசன் (பிரிவு 34) | ஜீஏ 2160 | 22.08.2008 | இல. 229, பமுணுகம |

எக்கவுண்டன்சி அன்ட் செக்ரெட்டேரியல் சேர்விசஸ் பியுரோ லிமிட்டெட்,
செயலாளர்.

இல. 86, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
கொஹுவல,
நுகேகொடை.
2008, ஓகத்து 26.

9-556

# ஏல விற்பனைகள்

## றுஹுுன அபிவிருத்தி வங்கி – கரன்தெனிய கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து ஏல விற்பனை

றுஹுுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி இங்கு கீழ்க் குறிப்பிட்ட சொத்துக்கள் 2008.10.02 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அச்சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் மாதம்பே, வேனமுல்லேயில் அமைந்துள்ள கடோல்கல்ல வத்த என்ற காணியை அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. டீ. ஜீ. மென்டிஸ் அவர்களின் 1976.09.13 ஆந் திகதிய இலக்கம் 340 எனும் வரைபடத்தின் பிரகாரம் துண்டுகளாக பிரிக்கப்பட்ட இலக்கம் 1-5 வரை துண்டு 5 ஐக் கொண்ட

ஒன்றிணைக்கப்பட்ட காணியின் இலக்கம் 3 என்ற முப்பத்தொன்று தசம் ஒன்று மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 31.13பே.) எனும் மிகப் பெரிய காணியும் அங்குள்ள மரங்கள், பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் அனைத்தும் அடங்கலாக.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2006.01.12 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும் 2006.09.08 ஆந் திகதிய "தினமின", "த ஐலண்ட்", "தினகரன்" எனும் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- காலி-அம்பலன்கொட பிரதான வீதியில் வேனமுல்ல சந்திவரை சென்று, அங்கிருந்து சென்று காலி அங்கிருந்து வலப்பக்கமாக விழும் பாதையில் சுமார் 400 மீற்றர் செல்ல மீண்டும் வலப்பக்கமாக விழும் அப்பாதையில் 50 மீற்றர் வரை செல்ல இச்சொத்துக்களைக் காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும், வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையின் 1% ;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2% ;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;

(5) விற்பனை செலவும், வேறு கட்டணம் இருப்பின் அவையும், அப்பணமும் ;

(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரன, அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382ஏ இல் அமைந்துள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் சாதாரண அதிகாரிக்கு செலுத்துக.

மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு. உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209, 091-5623733.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி : 041 - 2228731

9-409

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – ஹல்ஸ்டோப் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. என். ரீ. பெரேரா அவர்களால் 2006.08.04 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 4739 இல் துண்டு "கியூ" எனக் குறிக்கப்பட்ட மிதெல்லகஹவத்த அல்லது லுணுமிதெல்லகஹவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோரளை ராகம்பற்றுவில் ஜா-எல பிரதேச சபை எல்லைக்குள் (உப அலுவலகம் பட்டுவத்த) பட்டகம வடக்கில் வரிமதிப்பீட்டிலக்கம் 40, பொட்டு கொட்டுவ வீதியில் அமைந்துள்ளது.**
**(விஸ்தீரணம் : 33 பேர்ச்).**

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹற்றன் வங்கி பீஎல்சீ க்கு சொத்தை ஈடுவைத்தவருமான ஹெட்டியாரச்சிகே சமிந்த ஜயலத், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ. என். பி. பெரேரா அவர்களால் 2007, பெப்புருவரி 21 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 2884 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடும் சொத்தை அதே இடத்தில் 2008, ஒற்றோபர் 07 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவு செய்து, 2008, யூன் 27 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2008, யூலை 09 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
(2) உள்ளூராட்சிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000;

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்குச் செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, "ஹ. ந. வ. கோபுரம்", ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி, சிரேஷ்ட முகாமையாளர்" இடம் (மீளப்பெறுகை) பெறலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011-2661826.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹாநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121.

9-570/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – ஹல்ஸ்டோப் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

### பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். சில்வா அவர்களால் 2002, செத்தெம்பர் 06 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1318 இல் துண்டு ''வை1' எனக் குறிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் பண்டாரதெனிய ஒவிட்ட மற்றும் இந்திகஹ ஒவிட்ட என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணியானது, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளை பள்ளேபற்றுவில் மஹரகம நகர சபை எல்லைக்குள் கங்கொடவிலவில் கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 485/18 இல் அமைந்துள்ளது. (விஸ்தீரணம் : 8.20 பேர்ச்).**

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ க்கு ஈடுவைத்தவருமான அசேல குமாரகுப்த சுமணசூரிய, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயவர்தன அவர்களால் முறையே 2003.11.07 மற்றும் 2004.03.23 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறிகள் 1910, 2024 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹல்லொளுவ அவர்களால் 2005.12.02 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 1519 என்பவற்றில் கொடுப்பனவில் தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடும் சொத்தை அதே இடத்தில் 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவு செய்து, 2008, யூலை 04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008, யூலை 23 ஆந் திகதிய ''ஐலன்ட்'', ''திவயின'', மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
(2) உள்ளூராட்சிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000;

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்குச் செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, "ஹ. ந. வ. கோபுரம்", ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி, சிரேஷ்ட முகாமையாளர்" இடம் (மீளப்பெறுகை) பெறலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011-2661826.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹாநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121.

9-570/2

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – ஹல்ஸ்டோப் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

### பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. என். ரீ. பெரேரா அவர்களால் 2005, ஏப்பிறல் 13 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 3764 இல் துண்டு ''பீ' எனக் குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட, கஜுகஹஒவிட்ட மற்றும் ஆடியன்வல கும்புற என அழைக்கப்படும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. குணதிலக்க அவர்களால் 2000.02.23 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1243 இல் துண்டுகள் 5, 6, 9 மற்றும் துண்டுகள் 10, 11, 12 இன் பகுதிகள் மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. என். ரீ. பெரேரா அவர்களால் 2004.08.13 ஆந் திகதியிடப்பட்டு**

**தயாரிக்கப்பட்ட வரைபட இல. 3268 இல் துண்டு XI என்பவற்றின் கூட்டின் உப பிரிவு) காணித்துண்டு, மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அளுத்குரு கோரளை ராகம்பற்றுவில் கந்தானை உப அலுவலகம், ஜா-எல பிரதேச சபை எல்லைக்குள் ரிலாவுல்லையில் அமைந்துள்ளது.**

**(விஸ்தீரணம் : 19.5 பேர்ச்).**

*(கடமைப்பட்டவரும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ க்கு சொத்தை ஈடுவைத்தவருமான ஹெட்டியாரச்சிகே சமிந்த ஜயலத், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ. என். பி. பெரேரா அவர்களால் முறையே 2005.09.15 மற்றும் 2007.12.06 ஆந் திகதிகளிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறிகள் 1164 மற்றும் 3850 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்தை அதே இடத்தில் 2008, ஒற்றோபர் 07 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- தயவு செய்து, 2008, யூன் 27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008, யூலை 09 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
(2) உள்ளூராட்சிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000;

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்குச் செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை "கொழும்பு 10, டீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479, "ஹ. ந. வ. கோபுரம்", ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி, சிரேஷ்ட முகாமையாளர்" இடம் (மீளப்பெறுகை) பெறலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011-2661826.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121.

9-570/3

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – மரதகஹமுல்ல கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏல விற்பனை**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பீ. ஐ. அபேகோன் அவர்களால் 1994, யூலை 18 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1351 இல் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட, காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் "கிங்ஸ்வெல் பார்க் எஸ்டேட்" என அழைக்கப்படும் காணி, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோரளை தேசிய பற்றுவில் மாரபொல கிராமத்தில் அமைந்துள்ளது.**

**(விஸ்தீரணம் : 7ஏ. 3றூ. 16பே.).**

*(கடமைப்பட்டவர்களும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ க்கு சொத்தை அடகுவைத்தவர்களுமான ஹேனாதீர பத்திரன்னெஹலாகே சனத் பிரியந்த மற்றும் சமரதுங்க ரன்துனு அப்புஹாமிலாகே ருவினி சமரதுங்க ஆகியோர், நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். ஃபெனாண்டோ அவர்களால் 2004.10.25 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 996 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்கள்.)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிக்கப்பட்ட சொத்தை அதே இடத்தில் 2008, ஒற்றோபர் 03 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- தயவு செய்து, 2008, ஏப்பிறல் 17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008, யூன் 17 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
(2) உள்ளூராட்சிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000;

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்குச் செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'ஹ. ந. வ. கோபுரம்', ஹற்றன் நஷனல்

வங்கி பீஎல்சி, சிரேஷ்ட முகாமையாளர்" இடம் (மீளப்பெறுகை) பெறலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011-2661826.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹாநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121.

9-570/4

---

## மக்கள் வங்கி - ஹம்பாந்தோட்டை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008.10.08 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு இங்கு கீழ்குறிப்பிடுகின்ற சொத்து, அது அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே மாகம்பத்துவையின் மஹபேலண கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட மஹபோலானேயில் அமைந்துள்ள மஹபோலானேகெலே எனும் பெயரான காணிக்கு நிலஅளவையாளர் அதிபதியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 567 எனும் இறுதி வரைபடத்தில் இலக்கம் 4ஸிகிவ் எனும் 10 ஒரு றூட் இருபத்தெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 28பே.) எனும் மிகப்பெரிய காணியும், அங்குள்ள நிலம், கட்டிடங்கள் அனைத்தும் பயிர்ச்செய்கை அடங்கலாக, கட்டிடங்களுக்கு பொருத்தப்பட்டுள்ள கீழ்க்கண்ட இயந்திரங்களின் உதிரிப்பாகங்களும் அடங்கும் :

| | | | |
|---|---|---|---|
| (1) | இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட எலிவேடர் | - | 02 |
| (2) | சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட கம்பினேஷன் | - | 02 |
| (3) | சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொலிசர் | - | 01 |
| (4) | இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட செரேடர் | - | 01 |
| (5) | இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்விச்போட் | - | 01 |
| (6) | சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் | - | 02 |

**மேலதிக விபரங்களுக்கு.**- 2007.10.19 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும், 2008.01.21 ஆந் திகதிய "தினமின" சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிய ஏலவிற்பனைப் பகுதியை கவனத்திற் கொள்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- அம்பலன்தொட-ரிதியகம வீதியில் கி. மீ. 4.5 அளவு செல்ல கிடைக்கும் மஹபோலான ஊரில் இடப்பக்கமாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் ஏலவிற்பனை இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை அத்தாட்சிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "ஹம்பாந்தோட்டை, டவர் ஹில் மாவத்தையில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச தலைமை அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்தவும்.

தொலைபேசி இல.: 047-2220901, 2220903, 2220900 ; தொலைநகல் இல. : 047-2220900.

உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்குறிப்பிட்டபடி பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை மீண்டும் செலுத்தாதுவிடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041 - 2228731

9-597

---

## மக்கள் வங்கி — காலி மஹ வீதி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008.10.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு இங்கு கீழ்க்குறிப்பிட்ட விபரங்களைக் கொண்ட சொத்து அது அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில், நாகொட உதவி அரசாங்க அதிபர் பிரிவில், வட கங்கபடபத்துவ அலுத் இஹலகமே கிராமசேவை அலுவலர்

பிரிவின் மாபலகம ஊரில் அமைந்துள்ள கிம்புல்கொட்டுவே கந்த யினால் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் இலக்கம் 1051 எனும் பத்து ஏக்கர் ஒரு றூட் பதினெட்டு பேர்ச்சஸ் (10ஏ. 1றூ. 18பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்துப் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள், காணிக்கு போய்வர அனுமதியும் உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.09.14 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும், 2007.11.09 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிய ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- காலி வீதியிலிருந்து வதுரம்ப-மாபலகம வழியாக வதுரம்ப-நாகொட வழியாக 04 மைல் கெடகொட பக்கமாகச் சென்று கெடகொட சந்தியிலிருந்து வலப்பக்கமாக இருக்கும் கிம்புல்கொட்டுவ வரையுள்ள பாதையில் (பன்சாலைக்கு எதிர்ப்புறமாக இருக்கும் வழியாக) 03 கி. மீ. அளவு செல்ல தென்படும் 1.5 கி. மீ. அளவு சென்றதும் குறிப்பிட்ட சொத்துக்களை காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் ஏலவிற்பனை தீர்ந்ததும் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்துக :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவற்றுக்கான பணம் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "காலி, பஹல டிக்சன் வீதியில், இலக்கம் 22 எனும் நிலையத்திலுள்ள மக்கள் வங்கியின் பிரதேச தலைமை அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்துக.

தொலைபேசி இல.: 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இலக்கம் : 091-2232230.

உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்படி குறிப்பிட்டபடி பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி : 041 - 2228731

9-598

**மக்கள் வங்கி – காலி மஹ வீதி கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்து ஏல விற்பனை**

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008.10.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்குறிப்பிடுகின்ற சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**.- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் காலி சதரைக்குள் ஹாலிஎல கிராமத்தில் அமைந்துள்ள ஹாலியகதெனிதுவ அல்லது தெல்கஹதுவ துண்டைப் பிரித்து வேறாக்கப்பட்ட பத்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.50பே.) எனும் மிகப்பெரிய இலக்கம் 03 எனும் காணியும் அங்குள்ள அனைத்து பழவர்க்கங்கள், கட்டிடங்கள் உட்படவும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2008.01.18 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும், 2008.03.24 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- காலி உடுகம வீதியில் 3 மைல்களுக்கு சென்று இடப்பக்கமாக இருக்கும் படதுவ டீ. எஸ். ஐ. தொழிற்சாலைக்குப் பக்கமாக சென்று அவ்வீதியில் 1/2 மைல் அளவு செல்ல, இடப்பக்கமாக விழும் வீதியில் மலையைத் தாண்டியதும் குறிப்பிட்ட காணியைக் காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏலவிற்பனை இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்தவும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், வேறு கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதிக்குள் காலி பஹல டிக்சன் வீதி, இலக்கம் 22 எனும் நிலையத்திலிருக்கும் மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்துக.

தொலைபேசி இல.: 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இலக்கம் : 091-2232230.

உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்படி குறிப்பிட்டபடி பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடின் தற்போதைக்கும் அச்சொத்துக்களை விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041 - 2228731

9-599

---

## வரையறுக்கப்பட்ட DFCC வர்தன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***1389 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. ஏ. ஆர். எஸ். பெரேரா அவர்களால் வரையப்பட்ட பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான 1998 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 304 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 7ஈ எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளேபத்துவில், ஹெடிகமயிலுள்ள சம்புத்தி கெபெல்லகஹவத்த மற்றும் பிரவேனி கெபெல்லகஹவத்த என அழைக்கப்படும் காணி 2730 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 7பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள வீதி ஒதுக்கீட்டுப் பகுதியில் பாதை உரிமை அனைத்தும் உள்ளடங்கலாக.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12பே.)***

*(பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. ஏ. வீரசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஏப்பிறல் 19 ஆந் திகதியிடப்பட்ட 1389 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் பிலியந்தலையில் ரண்துல மோட்டர் ட்ரேடர்ஸ் எனும் பெயரில் இயங்கும் நிறுவனத்தின் ஏக உரிமையாளரான பிலியந்தலையைச் சேர்ந்த பியகல வடுகே மஹேஷ் ஜயலால் பெர்னாண்டோ என்பவரால் வரையறுக்கப்பட்ட DFCC வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

வரையறுக்கப்பட்ட DFCC வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2 % (இரண்டரை சதவீதம்);
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 29,400 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500.
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 011-2440366/77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வர்தன வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும், காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 – 2502680, 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

9-618/1

---

## வரையறுக்கப்பட்ட DFCC வர்தன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***1514 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**குத்தகை உரிமைகள் மீதான :**

***கொழும்பு மாவட்ட நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி யிடப்பட்ட CO.8467 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 15 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (L/ CCO/ 224 வெளிக்களப் புத்தகம்***

**இல. CO. 4547, CO. 4548 தேசிய வரைபடக் கோவை 66/23) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை-கல்கிசை மாநகரசபை எல்லைக்குள், இரத்மலானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில், இரத்மலானை தெற்கில் அமைந்துள்ள ரஸ்தம்வத்த என அழைக்கப்படும் காணி மீதான குத்தகை உரிமைகள் அதில் அமைந்துள்ள அனைத்தும் உள்ளடங்கலாக.**

***(காணியின் விஸ்தீரணம் : சைபர் தசம் ஒன்று நான்கு ஒன்பது ஐந்து ஹெக்டயர் (0.1495 ஹெக்டெயர்.)***

*(பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. வீரசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 1514 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் பிலியந்தலையில் ரண்துல மோட்டர் ட்ரேடர்ஸ் எனும் பெயரில் இயங்கும் நிறுவனத்தின் ஏக உரிமையாளரான பிலியந்தலையைச் சேர்ந்த பியகல வடுகே மஹேஷ் ஜயலால் பெர்னாண்டோ என்பவரால் வரையறுக்கப்பட்ட DFCC வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

வரையறுக்கப்பட்ட DFCC வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்);
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 28,700 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500.
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 011- 2440366/77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வர்தன வங்யின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும், காட்சியறையும்:* |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 – 2502680, 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

9-618/2

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்)
22 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை
அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

கடன் தொடர்பு இல. 23/2007

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 27.06.2008 ஆந் திகதிய 1556 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 19.06.2008 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல றோட், குளியாப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 30.10.2008 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

***அட்டவணை***

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பற்று மெதபற்று கோரளை, மேற்கில் நாபிரித்தன் கடவரயில் அமைந்த 'ஜொஹன்னாஸ் லாண்ட் எஸ்டேட் அல்லது ஜொஹானாவத்த' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எல். எச். பெர்னாண்டோ தயாரித்த 2002, சனவரி மாதம் 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4169 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : வரைபடம் இல. 4169 இல் துண்டு 1 உம் ; கிழக்கில் : வரைபடம் இல. 57008 இல் துண்டு 3 உம் ; தெற்கில் : வரைபடம் இல. 4169 இல் துண்டு 3, 4 உம் ; மேற்கில் : றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4169 இன்படி இரண்டு ஏக்கர்கள் (2ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் எல் 186/96 இல் பதிவுசெய்யப் பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஆர். பீ. தயாரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நாத்தாண்டிய கிளை.

9-620